6 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு


“சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே”

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர்:
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

காரியாலயம்: பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 9-2-33

பச்சைக் குதிரை ஜயம்!



டெல்லி அரசாங்கத்தை சென்னை அரசாங்கம் பச்சைக் குதிரைப் போட்டியில் வென்று விட்டது. சர்க்கார் ஊழியர்களின் சம்பள வெட்டில் 5% தான் டெல்லி சர்க்கார் உயர்த்தினர். ‘தாய் எட்டடி குட்டி பதினாறடி’ என்றபடி சென்னை மாகாண துரைத்தனம் 10% உயர்த்தியிருக்கிறது. சர்க்கார் சம்பளம் வாங்குபவருக்கு சந்தோஷமே! ஆனால் அதோ வயிறெரிட்டி நிற்கும் விவசாயிக்கு உதவி செய்ய சர்க்காருக்கு மனமில்லையா?

பாயஸமும் பட்டினியும்

சென்ற வருடத்தில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தில் பத்தில் ஒரு பங்கு பிடிக்கப்பட்டதல்லவா? அதில் பாதியளவே இந்த வருடம் பிடிக்கப்படப்போவதாக டெல்லி சர்க்கார் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்கள். ஆனால் சென்னைத் தாராத்தனம் டெல்லித் தாராத்தனத்தைவிட ஒருபடி மேலே போய்விட்டது. சர்க்கார் ஊழியர் சம்பளத்தைப் பழைய நிலைக்கு முழுதுமே உயர்த்தி யிருக்கிறது. இப்போது சென்னைத் தாராத்தன கஜானாவில் பணம் நிரம்பியதற்கு கள் வருமானம் அதிகமானதும் ஒரு காரணம் எனப்படுகின்றது. கள்ளுக் காசா யிருந்தாலென்ன? "நாய் விற்ற காசு குலைக்குமா?"

சென்னை ஊழியர்கள் சர்க்காரை நன்றாய் 'காக்கை பிடித்ததற்'காக இந்த அதிக வரப்பிரஸாதம் கிடைத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இதைக் கொண்டாட சர்க்கார் ஊழியர்கள் வீட்டில், முக்கியமாக பெருத்த சம்பளம் வாங்குகின்றவர்கள் பங்களாக்களில் அடுத்த ஏப்ரல்மீ" முதல் தேதி முதல் பாயஸம் வழிந்தோடப் போகின்றது.

ஆனால் நாட்டின் ஜனங்களனைவரும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களா? இல்லை, இல்லை. இந்த மாகாணத்தில் முக்கால்வாசிப் பெயர்கள் விவசாயத்தால் ஜீவிப்பவர்கள். சர்க்கார் ஊழியர்கள் வீட்டில் பாயஸம் வரப் போவது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாக ஏழைக் குடியானவர் குடிசைகளில் பட்டினி தாண்டவமாடப் போகின்றது. சம்பளம் பிடிக்கப்பட்ட காலத்திலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் உயிர் வாழ்ந்து கொண்டுதா னிருந்தார்கள். ஆனால் கிராமங்களில் இப்போது நெல் விலையும், நிலக் கடலை விலையும் இருக்கின்ற ரீதியைப் பார்த்தால் விளைவுகளை அத்தனையையும் விற்று விட்டு சர்க்கார் கிஸ்தியைக் கட்டி விட்டு வயிற்றில் துணியைக் கட்டிக் கொண்டு விவசாயிகள் கிடக்க வேண்டிய நிலைமை வந்து விடலாம். ஆனால் அந்த கிஸ்தி பணத்திலிருந்து தான் இப்போது 90 ரூ. சம்பளக்காரனுக்கு 100 ரூ. கொடுக்கப்படப் போகிறது.

இந்த சமயத்தில் ஏழை விவசாயிகளின் நிலைமைகளை அறிந்து எங்கனும் கிஸ்தியைக் குறைத்து உதவாவிட்டால் பின்னால் ஏற்படப் போகும் சங்கடங்களை இப்போதே சர்க்காருக்கு எச்சரிக்கை செய்கின்றோம்.

சமாதானத்திற்கு வழி எது?

டெல்லி சட்ட சபையில், காந்திஜியின் விடுதலையைப் பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு சர்க்கார் அதிகாரிகள் அளித்த வழா வழாப் பதில்களைப் போன்று எந்தக் கேள்விக்கும் பதில் சொன்னதில்லை. "நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டுமென்று சர்க்கார் பெரிதும் விரும்புகின்றனர்" என்று ஹோம் மெம்பர் சொன்னாராயினும் அத்தகைய சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு எத்தகைய வழிகளை அநுஷ்டிப்பதென்ற யோசனையை அவர் சொல்லவில்லை.

அன்று சட்ட சபையிலிருந்த அத்தனை பேர்களும் 'நான் முந்தி, நீ முந்தி' என்று கேள்விகள் போட்டுப் பார்த்தும் பதில்களென்னமோ விசதமாக எதற்கும் கிடைக்கவில்லை.

"சட்ட மறுப்புக்காரர்கள் தங்கள் இயக்கத்தை நிறுத்தி விடுவதாக உறுதி தந்தார்களானால் உடனே கதி மோக்ஷம் பிறந்து விடும்" என்று ஹோம் மெம்பர் சொன்ன போது சர்க்காருள்ளத்திலிருந்த வறட்டு ஜம்பமே பேசிய தென்னலாம்.

"சிறையிலில்லாது வெளியே யிருக்கும் காங்கிரஸ்காரர்கள் சமாதானப் பேச்சைத் தொடங்கட்டுமே" என்று இன்னொரு கருத்து வெளிவந்தது. இதிலிருந்து சர்க்கார் தரப்பினருக்கு காங்கிரஸ் மகா சபையின் அமைப்பு எவ்வாறு என்பது தெரியாது என்றே ஏற்படுகிறது. காங்கிரஸ் காரியக்கமிட்டி கூடி ஆலோசித்தோ, அல்லது அவர்களால் ஸர்வாதிகாரம் தரப்பட்ட காந்திஜி அவர்களின் ஆணைக்குக் கீழ்ப்பட்டோதான் காங்கிரஸ்காரர்கள் நடக்க முடியும். வேறு எவரும் சமாதானப் பேச்சு பேசுவதைத் தேச மக்களும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆகவே சர்க்காருக்கு சமாதானப் பேச்சு தொடங்க வேண்டுமென்ற ஆசையிருக்குமானால் இந்த வருடம் காங்கிரஸ் மகா சபையில் எல்லாத் தேச பக்தர்களும் காந்திஜியோடு கூடுவதற்கு சந்தர்ப்ப மளிக்க வேண்டும். எதற்கும் முதலில் "காந்திஜி விடுதலை" என்பதே நிற்கின்றது. அக் காரியத்தைச் செய்ய சர்க்காருக்கு மனமில்லையென்றால் சமாதானத்தில் விருப்பமில்லையென்றுதான் அர்த்தம். ஏன் சாந்தம், சமாதானம், அமைதி யென்று அடிக்கடி வாய்ச் சவடால் அடிக்கவேண்டும்?

"இஸுக்க இஸுக்க நீளுது"

ஒட்டாவா! இதைப் பற்றி கேட்டுக் கேட்டு காதுகள் ஒட்டையாகி விட்டன. இந்தியாவின் துறைமுகங்களில் ஏற்றுமதியோ, இறக்குமதியோ ஆகும் ஏகாதிபத்தியச் சரக்குகளுக்கு, சுங்க வரியைக் குறைத்து வசூலிப்ப தென்ற ஓர் ஒப்பந்தத்தை ஒட்டாவாவில் கையெழுத்திட்டனர். ஆனல் எந்த சமயத்திலாவது எந்த நாடாவது விரும்பினல் அந்த ஒப்பந்தத்தினின்று நழுவிக் கொள்ளலா மென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனல்,

அஸ்ஸெம்பிளி! டெல்லி சட்ட சபையென்ற கை காட்டி மரச் சந்தை யென்ன செய்தது தெரியுமா? அந்த ஆறு மாத ஒப்பந்தத்தை மூன்று வருடம் அமுலில் வைத்துக் கொள்வதென ஓட் செய்து விட்டது. ஆறு மாதத்தை இழுத்து மூன்று வருடமாக்கி விட்டது. ஆயினும் எந்த சமயத்திலும் இந்த ஒப்பந்தத்தை உடைத் தெறியலாம் என்ற பிரிவு மட்டும் இன்னும் இருந்து கொண்டே யிருக்கிறது. ஆனல்,

ரன்ஸிமன்!—பிரிட்டனின் வியாபார மந்திரி, சில நாட்களுக்கு முன்னே சீமையில் பேசிய சொற்கள் இந்தியக் காதுகளை திடுக்கிடச் செய்து விட்டன. "ஒட்டாவாவில் இந்தியா-ஏகாதிபத்திய ஒப்பந்தம் ஆறு மாதங்களுக்குத்தான் செய்யப்பட்டது. ஆனல் இந்திய சட்ட சபையோ மூன்று வருடத்துக்கு உயிர் கொடுத்துளது. ஆகவே பிரிட்ட னுக்கு இனி நற்காலம் தான்! அதற்கு அறிகுறியாகவே 200 தொழிற்சாலைகள் அதிகமாயிருப்பதைக் கவனியுங்கள்" என்று கொக்கரித்துப் பேசினர். இஷ்டமானல் இந்தியா இந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறியலாம் என்ற பகுதியை வேணுமென்றே மறந்து 'மூன்று வருஷம் நிரந்தர ஒப்பந்தம்' ஏற்பட்டு விட்டதாக அவர் களி துள்ளப் பேசினர். சென்னைப் பட்டணத்துப் பாஷையில் சொல்லப் போனல் 'இஸுக்க இஸுக்க நீளுது' ஒட்டாவா.

ஒட்டாவா ஒப்பந்தம்! இதுதான் இந்தியத் தொழிற்சாலைகளை நாசமாக்கப் போகின்றதென அநேகர் அபிப்பிராயப் படுகின்றனர். அதற்கு ஆரம்பம் போலவே பம்பாயில் அநேக ஆலைகள் மூடப்படும் தருவாயிலிருக்கின்றன. பதினயிரக் கணக்கான தொழிலாளிகள் வேலையின்றி பட்டினி கிடக்கப் போகின்றனர். சுதேசித் தொழிலைக் காப்பது அவசியமா? ஒட்டாவா ஒப்பந்தம் அவசியமா? டெல்லியிலுள்ள சட்ட சபை அமுஞ்சிகள் ஆலோசிக்கட்டும்!

சர்க்கார் சர்க்கஸ்

சதாவதானம், தசாவதானம், அஷ்டாவதானம் என்ற வித்தைகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம். ஒரு குழந்தை குப்பையில் புரண்டு கொண்டே வடை சாப்பிடுமானல் அச் சமயத்தில் "த்வி அவதானம்" செய்வதாகச் சொல்லலா மல்லவா? அந்த த்வி அவதானத்தைத் தான் இந்தியா கவர்ன்மெண்டு செய்து வருகிறது. அமைதியையும், சட்டத்தையும் காப்பதாகச் சொல்லிக் கொண்டு அவசரச் சட்டக் குப்பையில் புரள்கின்றது. 'அரசியல் சீர்திருத்தம்' என்ற கற்பனை வடையைச் சுவைத்துக் கொண்டு மிருக்கிறது. இந்த த்வி அவதானத்தைப் பற்றி இங்கிலாந்தில் கன்ஸர்வேடிவ்கள் வாசாமகோசரமாக வர்ணிக்கின்றார்கள்; புகழ்கின்றார்கள்.

இங்கிலாந்தில் பிரிம்ரோஸ் சங்கம் என்று ஓர் சங்கம் உண்டு. பிரிம்ரோஸ் என்பது நமது நாட்டு யானை நெருஞ்சிப் பூ போன்ற ஒரு புஷ்பம். சங்கத்தின் பெயரிலேயே ஒரு 'த்வி அவதானம்' இருக்கின்றதல்லவா? யானையும் ரோஜாவும்! அந்த சங்கத்தின் ஸ்திரீகளுக்கு முன்னே—உஷார் பெண்களுக்கு முன்னே—மிஸ்டர் பட்லர் என்ற ஆண் மகன் இந்தியாவின் 'த்வி அவதான' ஆட்சியைப் பற்றி ஒரு 'லெக்சர்' பேசினர். "ஒரு புறத்தில் சட்டத்தை அமுல் நடத்துகின்றோம்; இன்னெரு புறத்தில் 3-வது வட்ட மேஜையை ஜயமாக நடத்தி சீர்திருத்த அழகை சிருட்டிக்கின்றோம். என்னே எங்கள் சமர்த்து!" என்று தற்புகழ்ச்சி சொல்லிக் கொண்டார்.

பட்லர் யார்? சீமையில் இந்திய மந்திரியாயுள்ள ஸாமுயேல் ஹோருக்கு காரியதரிசி அவர்; ரொம்ப சிறிய வயதுடைய ஓர் இளைஞனென்று முன்னமேயே 'சங்கி'ல் பிரஸ்தாபித்திருக்கின்றோம். இந்த இளைஞன் மகா அநுபவம் மிகுந்தவன் போலப் பேசுவதும் ஒரு 'த்வி அவதானம்' அல்லவா?

இந்த 'சட்டம் காத்து, அரசியல் வழங்கும்' 'த்வி அவதான'த்தின் பயன் என்ன ஆகுமென்று சொல்லலாமா? குதிரையின் மீது ஒரு காலும், இன்னெரு கழுதையின் மீது ஒரு காலும் வைத்து அநுபவம் இல்லாதவன் சர்க்கஸ் காட்டினல் என்ன முடிவு ஏற்படுமோ அதுதான் ஆகப்போகிறது என்று சில அறிஞர் சொல்கின்றார்கள். நமக்கென்ன? பொறுத்துப் பார்ப்போமே!

“இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கியது”—யார்?

“கொடுப்பதைக் கொண்டு திருப்தி யடையும் சுபாவம் இந்தியர்களுக்குக் கிடையாது. ஒரு இந்தியனுக்கு ஏதாவது உதவி செய்தால் உடனே நம்மை மடையனென்றே அவன் தீர்மானிக்கின்றான். பிறகு கொஞ்சம் கொஞ்சம் இன்னும் என்னென்ன பறிக்கலா மென்பதற்கு மேலும் மேலும் வழி தேடிக்கொண்டே யிருப்பான். இதற்கு முடிவே கிடையாது. ஒவ்வொரு வைஸ்ராயும் இந்தியாவுக்கு ஏதாவது ஒன்றைக் கொடுத்துக் கொடுத்துக் கெடுத்து விட்டார்கள். இனி கொடுப்பதற்கு ஒன்று மில்லை. ஊரை விட்டு விட்டு நாம் ஓடி வர வேண்டியதுதான் பாக்கி” என்று ஓர் வெள்ளைக்காரர் எழுதிய கடிதம் ‘மாஞ்செஸ்டர் கார்டியன்’ பத்திரிகையில் வெளியாகி யிருக்கிறது.

இந்த வெள்ளைக்காரர் சென்னையில் ‘வியாபாரம்’ பண்ணிப் பிழைத்தவரென்று தெரிகிறது. இந்தியர்கள் மீது விதம் விதமாகச் சாட்டப்படும் குற்றங்களில் இவர் கூறியதும் ஒன்று என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். ரொம்ப பச்சையாகச் சொல்வதென்றால், இந்தியர்களுக்கு ‘இடம் தந்தால் மடத்தைப் பிடுங்குவார்’களென்பது இந்த வர்த்தகனின் அபிப்பிராயம். ஆனால் அந்த வெள்ளையருக்கு ஒரு வார்த்தை. ‘கிழக்கிந்தியக் கம்பெனி’ என்ற ஒரு வியாபாரக் கூட்டத்துக்குத் தங்க இடம் கொடுத்து, பிறகு ஒவ்வொரு சிற்றரசாகக் கொடுத்து கடைசியில் அகில இந்தியாவையுமே தந்து விட்டு இன்று விழித்துக் கொண்டிருக்கும் இந்தியர்களா மடத்தைப் பிடுங்கும் கோஷ்டியினர்?

ஒவ்வொரு வைஸ்ராயும் ஒவ்வொன்றைத் தந்து குட்டிச் சுவராக்கி விட்டதாக இந்த வெள்ளை வியாபாரி விசனிக்கின்றார். அவசரச் சட்டங்களென்ன, அடக்கு முறைகளென்ன, பறிமுதல்களென்ன, இப்படியாக ஒவ்வொரு வைஸ்ராயாக வந்து வந்து இந்தியருக்கு தந்து கொண்டிருக்கும் தாராளத்தை என்னென்பது? எல்லாவற்றையும் இழந்திருப்பவர்கள் இந்தியர்களே யன்றி வேறெவருமில்லை. “இனி மேல் ஊரை விட்டு ஓடுவதைத் தவிர கொடுப்பதற்கு யாதுமில்லை” என்று கூறி யிருக்கின்றார். அடடா! மேளதாளம் வேண்டுமா? வெற்றிலை பாக்கு வேண்டுமா? என்ன பசப்பு வார்த்தைகள்!

சிந்தாதே மூக்கை!

கபர்தார்! இனிமேல் தெருவில் மூக்கு சிந்துகின்ற போது அண்டை அயல் பார்த்தே சிந்த வேண்டும். மூக்கு நமது சொந்த சொத்தானாலும் அது தெருவின் வழியே போகிறவர்களையும் பாதிக்கு மென்பது இப்போது தெரிகிறது. உதாரணமாக:

டாக்கா என்ற ஊரில் காளிபாதன் என்ற வங்காளி மாணவன் தெரு வழியே போய்க் கொண்டிருந்தான். சாலை வழியே பதினைந்து ஸோல்ஜர்கள் போய்க் கொண்டிருந்தனர். அப்போது அம் மாணவன் மறு பக்கம் திரும்பி நின்று கொண்டு தனது மூக்கை விரல்களால் பிடித்துக் கொண்டிருந்தான். அம்மாதிரி அச் சிறுவன் நின்றதை தங்களைக் கேலி செய்ததாக ஸோல்ஜர்கள் நினைத்தார்கள். நிராயுதபாணியான அம் மாணவனை ஓர் ஸோல்ஜர் பிரம்பால் அடித்தானாம். “ஏன் அடிக்கின்றீர்கள்!” என்று வாக்குவாத மேற்படவே பையனுக்கு பூசை பலமாய்க் கிடைத்ததாம். இவ்வாறு ஒரு சிறுவன் அடிக்கப்பட்டது வாஸ்தவமா வென்று சில பொது ஜனத் தலைவர்கள் சர்க்காரைக் கேட்டார்கள். அந்த பிர்க்கா மாஜிஸ்திரேட்டிட மிருந்து பதிலும் கிடைத்து விட்டது. “பையன் வாயாடித்தனமாக நடந்து கொண்டதால் அடிக்கப்பட்டானாம். இனி மேல் இத்தகைய சச்சரவுகள் ஜனங்களுக்கும் ஸோல்ஜர்களுக்கும் ஏற்படாமல் நட்புரிமை ஏற்பட வேண்டும்” என்று உலகுக்கு நல்ல பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறார் அவர்.

மூக்கைத் தொட்டால் ஊமைகளுக்குக் கோபம் வருமென்று சொல்வார்கள். அந்த ஸோல்ஜர்கள் அந்த வர்க்க மன்று. மட்டரகமான சாராய நாற்ற மடித்தால் கூட இனி மேல் எவரும் மூக்கை மூடிக் கொள்ளலாகாது என்று ஏற்படுகிறது. அது மட்டு மன்று. மாஜிஸ்திரேட் நீதி வழங்கியதுதான் ஆச்சர்யம். அடித்த ஸோல்ஜரைக் கண்டு பிடித்து அவனைத் தெருவில் நிற்க வைத்து ‘ஸாம்பிள்’ கொடுப்பதற்கு அவருக்கு அதிகார மில்லையோ, தைரிய மில்லையோ, அல்லது மன மில்லையோ நமக்குத் தெரியாது. போர் வீரர்களிடம் அடிபட்டதற்காக அந்தப் பையன் பெருமை பாராட்டிக் கொண்டு அவர்களிடம் இனி நட்புரிமை பாராட்டியே தீரவேண்டு மல்லவா! அதுதான் மாஜிஸ்திரேட்டின் புத்திமதி யன்றோ?

சங்கராசாரியருக்கு பதில்

(பூரி ஆசாரிய ஸ்வாமிகள் திருமுகம்)

"வைத்தியனேயோ, எஞ்சினீயரையோ பொது ஜன வோட்டெடுத்து நிர்ணயிப்பதா? அது போல மத சம்பந்தமான நம்பிக்கையையும் பொது ஜன வாக்கெடுத்து நிர்ணயிக்க முடியுமா? மேலும், உண்மையான ஸனதனிகள் எவ்வளவு தவருன வழியில் செல்பவர்களாக நீங்கள் கருதிய போதிலும் அவர்கள் மீது அம்மாதிரியான முடிவுகளை நிர்ப்பந்தமாகச் சுமத்துவது ஒழுங்கான தென்றோ அல்லது சட்ட ரீதியான தென்றோ நீங்கள் கருதுகின்றீர்களா? ஸனதன தர்மத்திலிருந்தும், உண்மையானதும், சட்ட ரீதியான முறையிலிருந்தும் பிறழ்ந்து நடப்பவர்களுக்கு நீங்கள் ஏன் பின் பாட்டு பாடுகின்றீர்கள்? இது உங்களுக்குத் தகாது. யோசித்துப் பார்த்துத் திருத்திக் கொள்ளுங்கள்." என்று பூரி மடத்து சங்கராச்சாரியார் ஸ்ரீமான் ரங்கய்யருக்குத் தந்தி யடித்து, அவரது மசோதாக்களை ஆட்சேபித்திருக்கிறார்.

ஸ்ரீயுத ரங்கய்யரின் பதில்

அதற்குப் பதிலாக ரங்கய்யர் ஒரு நிருபரிடம் அறிவித்ததாவது :—"ஜகத் குருவிடம் எனக்கு மிகுந்த மதிப்புண்டு. தீண்டாமையை ஒழிக்கும் விஷயத்தில் நான் மலேயாளத்திலுள்ள எனது குடும்பத்தினர் உள்பட பலர் கொண்டுள்ள கருத்துக்களுக்கு விரோதமாகச் செல்வது எனக்குத் தெரியும். நான் மகாத்மா காந்தியின் அஹிம்ஸா தர்மக் கொள்கை காரணமாகவும், ஜாதிப் பிணக்குகளை யொழிக்க முற்பட்டிருப்பதைக் கொண்டும் அவரைப் புத்தருக்குச் சமமானவர் என நான் கொண்டாடி வருகிறேன். ஆசாரிய ஜகத் குருவும், அவர் எவரது சார்பில் பேசுகின்றாரோ அவர்களும் எவ்வளவு பலமாகவும், ஆத்திரத்துடனும் என்னை எதிர்த்தாலும் நான் என் மனச் சாட்சியின் படியே நடக்கக் கடமைப் பட்டுள்ளேன். தீண்டாமைக்குள்ள சட்ட பலத்தை எடுத்து விடவே நான் விரும்புகிறேன். இதனால் ஸனதனிகளுக்கு என்ன கஷ்டங்கள் நேரிட்டாலும் அவற்றை நான் பொருட்படுத்தப் போவதில்லை. ஸனதனிகளுடைய தீர்மானத்திற்கு எனது தீர்மானம் மாறுபட்டிருந்தால் அதற்காக நான் மற்றவர்களுக்கு பின்பாட்டு பாடுவதாக ஸனதனிகள் என் மீது குற்றம் சாட்டுவது நியாயமாகாது.

"ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது மனச் சாட்சியே கடவுளாகும் என்பதை ஜகத் குருவுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நீண்ட காலமாக உறக்கத்திலாழ்ந்து கிடக்கும் சமூகத்தையே தட்டி யெழுப்ப நான் விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இழைக்கப் பட்டு வரும் கொடுமைக்கு சமூகம் நீண்ட காலமாக இடம் கொடுத்து வருகின்றது. நானும் ஒரு வைதிக ஸனதனி தான். ஆகவே வைதிக ஸனதனிகளின் மனதைப் புண்படுத்த நாங்கள் விரும்ப வில்லை. ஹிந்து மதத்திற்குள் அதன் குழந்தைகள் எல்லோரையும் ஒருங்கு சேர்த்து அதனைப் பலப் படுத்தவே நாங்கள் விரும்புகிறோம். ஹிந்து சமூகத்தை அழியாமல் சாக்கும் சேவையில் ஈடுபட்டுள்ள எங்களுக்கு ஜகத் குரு அவர்கள் தம்மாலியன்ற உதவியைச் செய்வாரென நம்புகிறேன்."

கடுதாசி பிரசாரம்

"தீண்டாமையை ஒழிக்கும் விஷயத்தில் நீங்களெல்லோரும் ஒன்று செய்யுங்கள். தெற்கே நாட்டுப் புறங்களில் உள்ள உங்கள் தாய் தந்தையருக்கும், உறவினர்களுக்கும் கடுதாசிகளை எழுதிப் பிரசாரம் செய்யுங்கள். உங்கள் பெரியவர்கள் இனி ஹரிஜன சகோதரரிடம் இரங்க வேண்டுமென்று மன்றாடிக் கடிதங்களை வரையுங்கள்" என்று சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் பம்பாயிலுள்ள தமிழர்களிடம் சொல்லி யிருக்கிறார். சென்னையிலுள்ள நமது நண்பர்களும் அம்மாதிரி தங்கள் தங்கள் உறவினருக்கு நெஞ்சுருகக் கடிதம் எழுதலாமென்பது எமது அபிப்பிராயம். ஹரிஜன முன்னேற்றத்துக்கு திண்ணைப் பிரசாரம், கடிதப் போக்கு வரத்துப் பிரசாரம் இவைகளே சாலச் சிறந்தவை. நண்பர்கள் செய்வாராக!

தக்ஷிணை கிடையாது!

இராணுவங்களின் அபாரச் செலவுகளை ஒவ்வொரு நாடும் குறைக்க வேண்டு மென்பதற்காக ‘ஆயுதப் பரிகரண இயக்கம்’ என்பது உலகில் தோன்றிற்று. மகா நாடு, மகா நாடு என்று அநேக நாட்டுத் தலைவர்கள் கூடிக் கூடிப் பேசுகின்றார்களே யன்றி உருவான காரியம் செய்வதற்கு இதுவரை எவரும் துணிந்தார்களில்லை. ஐரோப்பாவில் பச்சைச் சட்டை இயக்க மென்று ஓர் இயக்கம் தோன்றி யிருக்கிறது. போரின் மீது போர் தொடுப்பதென்று அக் கூட்டத்தினர் முடிவு செய்திருக்கிறார்களாம். ஆனால் முதன் முதலில் அஹிம்சா தத்துவம் என்பது பெரும்பான்மையான மனிதர் மண்டைகளில் நுழைந்தா லல்லது ‘ஆயுதப் பரிகரணம்’ முதலியன யாவும் வெறும் வாய்ச் சொற்களாகவே முடியும்.

ஆகவே நியூ பார்னெட்டைச் சேர்ந்த மிஸ் ஹிட்சிங் என்ற மாது அஹிம்சா முறையை யொட்டி தியாக வழியினால் இந்தக் காரியத்தை உலகுக்கு அறிவிக்கப் பிரயத்தனித்து வருகிறாள். அவளுக்கு விதிக்கப் பட்டிருக்கும் வருமான வரியில் பவுனுக்கு 11 ஷில்லிங் 3½ பென்னை அவள் சர்க்காருக்குச் செலுத்த மறுத்திருக்கிறாள். “ஏனெனில் சர்க்காரின் ஒவ்வொரு பவுன் வருமானத்தினின்றும் 11 ஷில்லிங் 3½ பென்ஸ் இராணுவச் செலவுக்குக் கொடுக்கப்படுகிறது. நான் போர்த் தொழிலுக்கு தக்ஷிணை கொடுக்கத் தயாராயில்லை” என்று கூறியிருக்கிறாள்.

மிஸ். ஹிட்சிங் ‘நண்பர் குழாம்’ (Society of Friends) என்ற சங்கத்தைச் சேர்ந்தவள். மேலும் அவள் சொல்கின்றாள் :—

“மத நம்பிக்கை யூட்டுபவர்கள் யுத்த கஜானாவுக்குக் கப்பம் செலுத்துவதா? என்னைப் பதினாயிரக் கணக்கான பேர்கள் பின்பற்றுவார்களாயின் ஆயுதப் பரிகரணம் வந்தே தீரும்! வரி மறுத்ததற்காக எனது அலமாரியையோ, படுக்கையையோ சர்க்கார் பறிமுதல் செய்து கொள்ளட்டும்! சிறைத் தண்டனைக்கும் நான் பயப்படவில்லை.”

உலகினின்று மறத் திமிரைப் போக்க வந்துள்ள அறக்குலத்தினர் முயற்சிகள் என்றேனும் கை கூடுமென்றே நினைக்கின்றோம்.

சங்கு போன் நெ. 8088

விநோத ராஜா மீன்கள்

சீமையில் கிளாஸ்கோ கச்சேரியில் கோந்தாள சமஸ்தானத்து மகாராஜ குமாரர், அந்த ஊர் குதிரைக்காரனொருவன் மீது 400 பவுன்களுக்காக ஓர் வழக்குத் தொடர்ந்தார். அந்த வழக்கு நடக்கும்போது மாஜிஸ்திரேட் குறிப்பிட்டதாவது :—

“இந்த மகாராஜாக்கள் இருக்கின்றார்களே, எல்லோரும் விநோதமான மீன்கள்! இதுகளிடம் தங்கத்தாலும், வெள்ளியாலும் பீரங்கிகள் இருக்கின்றனவாம். அவர்கள் கஜானாவில் ஏராளமான திரவியம் உண்டென்றும், எங்கு பார்த்தாலும் அவர்களுக்கு கடனும் உண்டென்றும் சொல்கிறார்கள்.” —ஹிந்து நிருபர்.

இந்த மாஜிஸ்திரேட் கொடுத்த மச்சப் பட்டம் நமது சுதேச ராஜாக்களுக்கு மிக்க பொருத்தமா யிருக்கிறது. தண்ணீரை விட்டு வெளியே போட்டால் அந்த மீன் எப்படியாகுமோ அப்படியே தான் தாய் நாட்டை விட்டுப் பிற நாடுகளில் உலாவும் ராஜாக்கள் கதி!

இந்த மச்சாவதாரங்களில் எத்தனையோ ஆஸ்திரேலியாவுக்கும், அமெரிக்காவுக்கும் போய் மச்ச கன்னிகைகளை கொண்டு வந்தன. விராலின் வாயில் அகப்பட்டுக் கொள்ளும் கெண்டைகளைப் போல புதிய மாமியார்களிடம் தங்கள் இந்திய சொத்துக்களை சமர்ப்பித்து பிராணனை விட்டவைகளும் உண்டு.

மதத்தை யிழந்து, குடிப் பழக்க மேற்று, தாய் நாட்டுக்கே திரும்பி வராது வீடு வாசல்களைக் கூட அந்நிய நாடுகளிலேயே வாங்கிக் கொண்டு காலந் தள்ளிய ‘மீன்’களும் உண்டு. உல்லாசமாகப் போன விடத்தில் ஏதோ விம்புக்காக நாய் கண் காட்சிச் சாலைகளையும், மோட்டார் சந்தைகளையும் அப்படியே விலை கொடுத்து வாங்கி, ஊரெல்லாம் கடன் வாங்கி அவதிப்பட்ட ஜன்மங்களும் உண்டு. இந்தியாவில் அதே சமயத்தில் அவரவர் அரசுகளில் ஏழைகள் அவதிப்பட்டுக் கொண்டே யிருந்தாலும் கேட்பாரில்லை. பந்து விளையாட்டே முக்தி, மோக்ஷம், போகம், ராஜ்ய பரிபாலனம் என எண்ணிக் கொண்டே சுற்றிக் கொண்டிருப்பனவும் உண்டு. இந்தியாவை பிற நாடனைத்தும் ஏளனம் செய்யுமாறு நடந்து கொண்ட மீன்கள் தான் அதிகம்.

இந்த சுதேச ராஜாக்களால் மொத்தத்தில் இந்தியாவுக்கோ, இந்திய சுயராஜ்ய இயக்கத்துக்கோ, எதற்காவது பிரயோஜன முண்டா?

நமது ஈட்டி முனை

உனக்கும் பே! பே!
உன் பாட்டனுக்கும் பே! பே!

அலஹாபாத் மாஜிஸ்திரேட் பெரிய ஆளா யிருக்கின்ருர். "உனக்கும் பே! பே! உன் பாட்டனுக்கும் பே! பே!" என்ற கதையையே அவர் ஞாபகப்படுத்தியிருக்கிருர். இதே ஊரில் தான் சில மாதங்களுக்கு முன்னே லாலா லஜ பதிராய் சிராத்த தினம் கொண்டாடுவதை சர்க் கார் தடுத்தனர். இதே ஊரில் சென்ற 6ம் தேதி யன்று புருஷோத்தம தாஸ் பார்க்கில் பண்டித மோதிலால் தினம் கொண்டாடுவதென ஏற்பாடாகி யிருந்தது. அந்தக் கொண்டாட் டத்தை சர்வ சஞ்சீவியான 144ஐப் போட்டுத் தடுத்து விட்டாராம். இது சர்வ சாதாரண மாயினும் ஒரு விசேஷம் உண்டு. அன்று பொதுக் கூட்டத்தில் வட்ட மேஜை வீரரான ஸர் தேஜ் பகதூர் ஸாப்ரூ தலைமை வகிப்ப தென்று ஏற்பாடாகி யிருந்ததாம். அவர் நடத் தும் கூட்டத்தைக் கூட அந்த மாஜிஸ்திரேட் தடுத்தது தான் விந்தையினும் விந்தை. "காங்கிரஸ்காரா உனக்கும் பே! பே! மித வாதி உனக்கும் பே! பே! பே!" என்று பாடி விட்டார். அந்த மாஜிஸ்திரேட் யார்? பிரிட்டிஷ் சர்க்காரைச் சேர்ந்தவர் தானே! கேல்கர் வட்ட மேஜைக்குப் போயிருந்தபோது அவரது கேஸரி பிரஸ் ஜாமீனைப் பறிமுதல் செய்ய பிரிட்டிஷார் பின் வாங்கினர்களா? இனி மேலாவது மிதவாதிகள் கண் திறக்குமாக!

ஒற்றைப் பெண்மணி!

வட்ட மேஜைக்குச் சென்றிருந்த ஒற்றைப் பெண்மணியான 'ஷா நவாஸ்' தமது அநுபவத் தைப் பற்றிக் கூறிய போது, "இந்திய ஸ்திரீ களின் சார்பாக நான் ஒருத்தி தான் கலப்பை பிடித்து தனியாக உழ வேண்டியதாயிற்று. என்னேடு வந்திருந்த நண்பர்களெவரும் போதிய உதவி எனக்குத் தரவில்லை" என்று கூறி யிருக்கிருள். இவள் பேச்சை இதர வட்ட மேஜை வீரர்கள் கவனித்தார்களா? "பெண் ணென்று சொல்லிடிலோ ஒரு பேயும் இரங்கு மென்பார்" அல்லவா? பெண்களிடம் செலுத்த வேண்டிய மரியாதை யென்று ஒன்று உண்டு என்று வட்ட மேஜை வீரர்களுக்குத் தெரியாது என்று நாம் சொல்ல வரவில்லை—பீகம் ஷா நவாஸின் வாக்கியத்தினின்று அது கிளைக் கிறது.

பணத்திற்கு வாடகை

சென்ற வருடத்தில் துரைத்தனத்தார் கடன் பத்திரங்களுக்கு 100க்கு $5\frac{1}{2}$ வீதம் வட்டி தந்தார்கள். இந்த வருடம் துரைத்தனத்தின் செல்வமும், நாணயமும் அதிகமாகி விட்டதாக வில்லிங்டன் கூடப் பேசி யிருக்கிருர். ஆகவே ஒரே வருஷத்தின் கடைசியில் 100க்கு 4 வீதம் வட்டிக்கு சர்க்காருக்கு பணம் கிடைத்திருக் கிறது. அடுத்த வருடத்தில் சமஷ்டி அரசியல் திட்டம் வந்தால் இன்னும் சர்க்காருக்கு செல் வாக்கு ஜாஸ்தி யாய்க் கொண்டே வருமாம். ஆகவே வட்டியும் குறைந்து கொண்டே போகு மாம். பேஷ்! பேஷ்! சில வருஷங்களுக்குப் பிறகு மித மிஞ்சிய செல்வாக்கு சர்க்காருக்கு வந்து விட்டதானல் சர்க்காரிடம் கடன் பத்தி ரங்களை வாங்கி, பத்திரங்கள் வாங்கிய பணத் தைக் காவல் காப்பதற்காக சர்க்காருக்கு 100க்கு 2 அல்லது 3 வீதம் வாடகை கொடுக் கும் நிலைமையும் வருமென்பது சர்க்கார் எண் ணமோ?

ஏகாதிபத்திய வெறி

"ஜான்புல்" என்ற பத்திரிகையில் ஏ. ஜி. கார்டினர் ஏகாதிபத்திய வெறியைக் கண்டித் திருக்கிருர். அவர் சொல்லி யிருப்பதாவது:—

"ஒரு புதிய இந்தியா ஜென்ம மெடுத்துக் கொண்டிருக்கின்றது. அதை நாம் நன்கு உணர்ந்து, விஷயங்களைச் சரிப்படுத்திக் கொள் வோமாக. பிரிட்டிஷ் ஆட்சியின் 150 வருஷங் களிலும் நாம் என்ன பார்க்கிறேம்? ஏகாதி பத்தியத்திற்கும், சுய ஆட்சிக்கும் எப்பொழு தும் போர்! இறுதியில் என்ன முடிவு ஏற்பட் டிருக்கிறது? சுய ஆட்சிக் கொள்கையே ஜெயித் திருக்கிறது. அமெரிக்காவில் நாம் சுய ஆட் சியை எதிர்த்தோம்; பின்னர் தோற்றேம். அயர்லாந்தில் எதிர்த்தோம்; பிறகு இணங்க வேண்டி யேற்பட்டது: தென்னுப்பிரிக்காவி லும் அதே கதிதான். இதனல் நாம் கற்கும் பாடமென்ன? ஏகாதிபத்தியத்திற்கு உலகில் இடமில்லை. எந்தத் தேசமும் தன்னை இன் னெரு தேசம் ஆள்வதை ஸகிக்காது. இந்தியா இந்த நிலையையே இப்பொழுது அடைந்திருக் கிறது. இனி இந்தியாவுக்கு ஒன்று சுய ஆட்சி யளிக்கவேண்டும், அல்லது ராணுவ பலத்தால் அதை ஆள வேண்டும்; ராணுவ பலத்தால் எவ்வளவு காலத்திற்குத் தான் நாம் இந்தி யாவை அடக்கி ஆள முடியும், பிரிட்டன் சிந் தித்துப் பார்க்கட்டும்."

நமது கிளிஞ்சல் குவியல்

சென்னை திலகர் கட்டடத்தில் பிரசங்கம் செய்ய முயன்றதாக ஏழு பேர் கைது செய்யப் பட்டு விடுவிக்கப்பட்டனர்.

திருமங்கலத்தில் சாராயக் கடையை ஏலம் விடும் போது மறியல் செய்ய வந்த தொண்டர் களில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

மதுரையில் 'காந்தி தின'த் தன்று ஊர்வலம் நடத்தி விதேசி ஜவுளிக் கடைகளை மறியல் செய்த போது மூவரைக் கைது செய்து பின்பு விடுவித்தனர்.

திருப்பூர் அகில பாரத சர்க்கா சங்கம் மானேஜர் ஸ்ரீமான் ஆர். வி. சர்மாவுக்கும், இன்னம் மூவருக்கும் தலா 6 மாதம்.

கள்ளிக்கோட்டையில் "சுயேச்சை தின"த் தன்று கைது செய்யப்பட்ட 40 பேரில் ஐவ ருக்கு மூன்று குற்றங்களுக்காக தலா 15மாதம் தண்டனை. காந்தி தினத்தன்று ஊர்வலம் நடத் திய 17 காங்கிரஸ்காரர்களை போலீசார் அடித் துப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போயினர்.

கேரள சர்வாதிகாரி ஸ்ரீமான் டி. எம். ராக வனுக்கு 15 மாதம் கடுங்காவல்.

பம்பாயில் ராஜீயக் கைதிகள் தினத்தைக் கொண்டாடுவதற்காக விதேசி ஜவுளிக் கடை யை மறியல் செய்த ஒருவருக்கு 6 மாதமும், மற்றொருவருக்கு ஒரு வருஷமும். மார்க்கட்டு அன்று மூடப்பட்டிருந்தது.

பம்பாயில் "அகில இந்திய ராஜீயக் கைதி கள்" தின சம்பந்தமாக ஐவர் கைதியாயினர்.

கல்கத்தாவில் ஊர்வலம் நடத்தியதற்காக 10 ஸ்திரீகளுக்கு தலா 3 மாதம் தண்டனை.

கல்கத்தாவில் ராஜீயக் கைதிகள் தினத் தன்று 6 தொண்டர்களும் 4 ஸ்திரீகளும் கைதி யாயினர்.

அலகாபாத்தில் ஒரு கோவிலில் ஜில்லா காங் கிரஸ் கமிட்டி கூடிப் பேசிக் கொண்டிருந்த போது 15 பேர் கைது செய்யப்பட்டனர்.

அலகாபாத்தில் சப்ருவின் அக்கிராசனத்தில் கூட விருந்த பண்டித மோதிலால் நேருவின் வருஷாப்திக தினத்தை 144-வது உத்திரவுப் படி சர்க்கார் தடுத்து விட்டனர்.

ராஸ் என்னுமிடத்தில் சர்வாதிகாரிகள் மகா நாடு கூடிய போது ஸ்ரீமதி கஸ்தூரி பாய் காந்தி யும், இன்னும் 6 பேரும் கைதியாயினர்.

காசியில் ஊர்வலம் நடத்திய ஜில்லா காங் கிரஸ் கமிட்டி கூடிப் பேசிக் கொண்டிருந்த போது 15 பேர் கைது செய்யப்பட்டனர்.

லக்ஷ்மணபுரியில் ஒரு வீட்டில் ஸ்பெஷல் ஜில்லா மகாநாடு கூடி தீர்மானங்கள் நிறைவேற் றிய பின்பு போலீசார் 3 கதவுகளை உடைத் துக் கொண்டு உள்ளே பிரவேசித்து 13 பேரைக் கைது செய்தனர்.

லக்ஷ்மணபுரியில் மோதிலால் நேருவின் தினத்தைக் கொண்டாடிய இரண்டு தொண்டர் கள் கைது செய்யப்பட்டனர்.

டெல்லியில் காந்தி தினத்தன்று இருவர் கைதியாயினர்.

ஸேரம்பூரில் 144 உத்திரவை மீறியதற்காக 12 பேருக்கு தலா 6 மாதம் கடுங்காவல்.

கான்பூரில் தேசீயக் கொடியுடன் கோவி லடியில் காவல் புரிந்த ஒரு தொண்டர் கைது செய்யப்பட்டார்.

ஸ்ரீயுத கயப் பிரஸாத் ஸிங்கின் "கோயில் பிரவேசத் தடை விலக்கு மசோதா"வை டில்லி சபையில் விவாதிக்க இராஜப் பிரதிநிதி அனு மதி கொடுத்து விட்டதாகத் தெரிகின்றது.

குண்டூரில் 'காந்தி தின'த்தன்று 3 தொண் டர்கள் கைது செய்யப்பட்டனர்.

பெஜவாடாவில் ஊர்வலம் நடத்திய இருவ ருக்கு இரண்டு குற்றங்களுக்காக தலா 6 மாதம்.

பெஷாவர் பிரபல காங்கிரஸ் ஊழியரான ஸ்ரீமதி நிகோ தேவிக்கு பஞ்சாபை விட்டு 24 மணி நேரத்துக்குள் வெளியேறிவிட வேண்டு மென்று உத்தரவு சாதரா செய்யப்பட்டது.

திருநெல்வேலி ஜில்லா முஸ்லீம் மகா நாட் டில் ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமையின் அவசியத் தைப் பற்றியும், நில வரியில்எட்டில் ஒரு பங்கு குறைக்க வேண்டுமென்றும், இந்திய சாமான்களையே ஒவ்வொரு முஸல்மானும் ஆதரிக்க வேண்டுமென்றும், அரசியல் நிலை உருப்படுவதற்கு மகாத்மா காந்தி விடுதலை யடைய வேண்டிய தவசியமென்றும் தீர்மா னங்கள் நிறைவேறின.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.